(1)

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C~~) U/S 173 BNSS

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165152

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 04 மு.த.அ. எண் | Date: 05.08.2024 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption ACT - 1988, (Amended) ACT. 2018 — Sections பிரிவுகள்: Sec. 7A
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 02.08.2024 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.08.2024 | Time : நேரம் 07.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.08.2024 | Time : நேரம் 08.30

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 35 km வடக்கில்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — கிராம நிர்வாக அலுவலகம், சிங்கனூர், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. பிரேமன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராதாகிருஷ்ணன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி — 107, மெயின் ரோடு, சிங்கனூர் கிராமம் மற்றும் அஞ்சல், திண்டிவனம் T.K, விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. தனவேல், கிராம நிர்வாக அலுவலர், சிங்கனூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - ஊதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 05/08/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 05/08/24.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.08.2024

Name: பெயர் N. ... [illegible]
Rank: நிலை ....................No. எண் .........

காவல் ஆய்வாளர்,
உணவு [illegible] மற்றும் [illegible] பிரிவு,
விழுப்புரம்.

(3)

Submitted: On 05.08.2023 at about 07.00 hrs, while I was in my office, one Tr.R.Murugan, S/o. Radhakrishnan residing at No.107,Main road. Singanur&Post, Thidivanam Taluk, Villuppuram District approached my detachment office and lodged a written complaint which read as follows:- அனுப்புநர், R.முருகன், த/பெ.ராதாகிருஷ்ணன், நெ 107, மெயின் ரோடு, சிங்கனூர், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,விழுப்புரம். ஐயா, நான் சிங்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆர்கானிக் விவசாயம் செய்து வருகிறேன். நான் திண்டிவனம் வட்டம், சிங்கனூர் கிராமத்தில் சர்வே எண் 128/2 29.5 ஏர்ஸ்( 73 செண்ட்) நிலத்தினை கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் சேந்தமங்கலம்(மேற்கு) கருப்பப்பிள்ளை புதூரைச்சேர்ந்த கோபாலசாமி என்பரின் மகன் முரளிகிருஷ்ணன் என்பவரிடமிருந்து கடந்த 12.06.2024-ம் தேதி ஆவண எண்.990/2024-ன்படி கிரையம் பெற்றேன். மேற்படி நிலத்தினை அளந்து அத்து காட்டுவதற்காக கடந்த 19.06.2024-ம் தேதி, நில அளவைப்பிரிவு, திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஆன்லைன் மூலமாக மனு எண்.2024/0123/07/002059 -ன் படி மனு செய்தேன். அதனடிப்படையில், கடந்த 19.07.2024-ம் தேதி திண்டிவனம் சர்வேயர் பாரதி, சிங்கனூர் VAO தனவேல் மற்றும் கிராம உதவியாளர் ஏழுமலை ஆகியோர் மேற்படி எனது நிலத்தினை அளந்து காட்டினார்கள். அவர்கள் அளந்து அத்து காட்டியதில் எனக்கு திருப்தி இல்லை என எழுதி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அப்போதே எனது நிலத்தை அளந்து காட்டியதற்கு சர்வேயருக்கு ரூ.6000 பணம் கொடுக்க வேண்டும் என்று சிங்கனூர் VAO தனவேல் கேட்டார். அதற்கு நான் அவரிடம், எதற்கு சார் இந்த தொகை இது அரசு கட்டணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை இந்த பணம் எங்களுக்குதான், எங்களுக்கு பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்றும் மேலும் தன்னை VAO Office வந்து பார் என்றும் சொன்னார். அதற்கு நான் பணம் ரெடி பண்ணிவிட்டு வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். அதன்பின்பு நான் 23.07.2024 ஆம் தேதி சிங்கனூர் VAO அலுவலகம் சென்று VAO தனவேலை பார்த்தபோது பணம் எடுத்து வருவதாக சொல்லிவிட்டு போனிங்க அதன் பிறகு வரவே இல்லை என்று கேட்டார். அதற்கு நான் எனது நிலத்தினை அன்று சரியாக அளவீடு செய்யவே இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ஏற்கனவே உன் நிலத்தை அளந்து முடிச்சாச்சி அதற்கே நீ இன்னும் நான் கேட்ட பணத்தினை கொடுக்கல என்று சொல்லி நீங்க மறுபடியும் புதுசா உங்க நிலத்தை அளக்க ஆன்லைன் மூலமாக மனு செய்துவிட்டு நான் ஏற்கனவே கேட்ட ரூ.6000 பணத்தை எடுத்துகிட்டு வந்து என்னை பார் என்றும் உங்க ஊர் கிராம கணக்குகள் எல்லாம் எங்கிட்ட தான் உள்ளது நான் இதை கொடுத்து சர்வேயரிடம் அளக்க சொன்னால் மட்டுமே சர்வே வேலை நடக்கும் என்றும் சொன்னார். பணத்த கொடுத்தால் தான் நான் சர்வேயரிடம் சொல்லி இந்தமுறை நிலத்தை ஒழுங்கா அளந்து உன் வேலையை முடித்து தர சொல்றேன் என்று சொன்னார் அதற்கு நான் அவ்வளவு பணம் என்கிட்ட இல்லை சார் என்று சொன்னேன் அதற்கு அவர் சரி ஆயிரம் ரூபாயை குறைச்சிகிட்டு ரூ.5000 பணம் எடுத்துகிட்டு வந்து கொடுத்தால் நான் உன் வேலையை முடிச்சி தரேன் என்று சொன்னார். அவரிடம் சரிங்க சார் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

அதன் பிறகு நான் சிங்கனூரில் இருந்து புறப்பட்டு சென்னையில் உள்ள வீட்டிற்குக்கு சென்றுவிட்டேன். சென்னையிலிருந்து ஊருக்கு வந்தபிறகு நிலத்தினை அளப்பது சம்மந்தமாக மீண்டும் 02.08.2024-ம் தேதி வெள்ளிக்கிழமை VAO தனவேலினை பார்க்க எங்க ஊர் VAO அலுவலகம் சென்றேன். அங்கு VAO அலுவலகம் பூட்டி இருந்தது அதனால் நான் VAO தனவேலுக்கு போன் செய்து உங்களை பார்க்க ஆபிசுக்கு வந்துள்ளேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களது பழைய மனு முடிக்கப்பட்டுவிட்டது. எனவே புதுசா ஆன்லைனில் அப்ளை பண்ணிவிட்டு திங்கட்கிழமை என்னை வந்து பார் என்றும் திங்கட்கிழமை கண்டிப்பா நீங்க ரூ 5000 பணம் எடுத்துவரனும் என்றும் இல்லைனா உங்க வேலையை சர்வேயரிடம் சொல்லி பெண்டிங்லேயே வைக்க சொல்லிவிடுவேன் என்று சொன்னார். அதற்கு நானும் சரிங்க சார் திங்கட்கிழமை பணம் எடுத்துகிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன் அன்றைய தினமே ஆன்லைன் மூலமாக மனு எண்.2024/0123/07/002993-ன் படி புதிதாக மனு செய்தேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது VAO தனவேலுக்கு லஞ்சம் கொடுத்து சர்வேயர் மூலம் நிலத்தை அளக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து நான் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த புகார் மனுவினை இன்று தங்களிடம் கொடுக்கின்றேன். எனவே, சர்வேயர் மூலம் நிலத்தை அளக்க ரூ.5,000/- லஞ்சமாக கேட்கும் சிங்கனூர் VAO தனவேல் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd xxxxxx (R.Murugan) நாள்:05.08.2024.

Sir,

Received the above written complaint on 05.08.2024 at about 07.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.4/2024/AC/VPM u/s 7-A of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs today on 05.08.2024 and took up for Investigation.sd xxxxxx on 05.08.2024 (N.Eswari) Inspector of Police, V&AC, VPM).

The original FIR along with a the original written complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

05-08-24

(N.Eswari)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.